**செய்தி வெளியீடு எண்:374** **நாள் : 08.07.2014**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் தலைமையில் மீன்வளத்துறையின் திட்டங்கள் குறித்தான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மீன்துறை ஆணையர் அலுவலகத்தில் இன்று (07.07.2014) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர் முனைவர் ச.விஜயகுமார், இ.ஆ.ப., அவர்கள், மீன்துறை ஆணையர் டாக்டர். பீலா ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள், மீன்துறை தலைமைப்பொறியாளர், தலைமையலுவலக மீன்துறை கூடுதல் இயக்குநர், மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக்கூட்டத்தில் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குறிப்பாக கடல் மீனவர்களின் நலனுக்கென செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களான மீன்பிடித் தடைக்கால நிவாரணத் திட்டம், மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் திட்டம், கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் மற்றும் மீனவ மகளிருக்கென தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஆகியவற்றின் கீழ் மின்னணு பணபரிவர்த்தனை மூலம் உதவித் தொகை பட்டுவாடா செய்யப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தான விவரங்கள் மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், உள்நாட்டு மீன்வள உற்பத்தியை அதிகரித்திட தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மற்றும் நீர்வள நிலவள திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்து திட்டங்களை விரைவாக செயல்படுத்திட அறிவுறுத்தியதுடன், உள்நாட்டு மீன் மற்றும் மீன்குஞ்சு உற்பத்தியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக எய்தப்பட்ட சாதனைகள் ஆய்வு செய்யப்பட்டது.

நல்ல தரமான மற்றும் சுகாதாரமான மீன் மற்றும் மீன் உணவுகளை மக்களுக்கு சரியான விலையில் விற்பனை செய்திடும் நோக்கத்தோடு செயல்பட்டுவரும் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்ததுடன் தமிழ்நாடு தலைமை கூட்டுறவு இணையத்தின் மீன்வள மற்றும் மீனவர் நல மேம்பாட்டு நடவடிக்கைகளை விரைவுபடுத்த மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மீன்துறை அலுவலர்களான மண்டல மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

மீன்துறை ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**